திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பூளவாடியி லுள்ள மருத்துவமனைக்கு இப்பொழுது வாரத்திற்கு இரண்டு முறை தான் மருத்துவர் வந்து செல்கிறார். அதை மாற்றி அங்கே நிரந்தரமாக பணியாற்ற ஒரு மருத்துவரை நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பூளவாடி ரூரல் டிஸ்பென்சரியில் ஒரு மருத்துவர் இருந்து வந்தார். அந்த மருத்துவர் ராஜிநாமா செய்துவிட்டார். ஆகவே, பெதப்பம்பட்டி ரூரல் டிஸ் பென்சரி டாக்டர் அதையும் அடிஷனலாக கவனித்து வருகிறார். கனம் உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், குடிமங்கலம் பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஸார், இரண்டு தினங்களுக்கு முன்பு கேள்வி சமயத்தில் இதே கனம் அமைச்சர் அவர்கள் டாக்டர்களுக்கு ஊதியம் சரியாகத்தான் கொடுக்கப்படுகிறது, அதைப்பற்றி ஆவலாதி இல்லை என்று சொன்னார். இப்பொழுது டாக்டர் ராஜிநாமா செய்ததாகச் சொன்னார். ஊதியத்தின் அடிப்படையில் அந்த டாக்டர் ராஜிநாமா செய்தாரா அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காக ராஜிநாமா செய்தாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்ன காரணத்திற்காக ராஜிநாமா செய்தார் என்ற தகவல் என்னிடம் இல்லை. பல காரணங்களுக் காக ராஜிநாமா செய்திருக்கலாம்.

உள்ளாட்சித்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

* 129 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை பார்க்கும் எல்லா சிப்பந்திகளுக்கும் பெ ஷன் கொடுக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

நகராட்சிகளிலுள்ள சில பதவிகளை மாநில அரசு பணிகளின்கீழ் கொண்டுவருவது வசதியாய் இருக்கும் பொருட்டு, 1920-ம் ஆண்டுத் தமிழக மாவட்ட நகராட்சிகள் சட்டத்தைத் திருத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. அப்பதவிகள் மாநில அரசுப் பணிகளின் கீழ்க் கொண்டுவரப்படுகையில், மாநில அரசு ஊழியர்களுக்கு கிடைக்கும் ஓய் வூதியம் போன்ற சலுகைகள் அப்பதவிகளுக்கும் கிடைக்கும். இதைச் செய்து முடித்தவுடன், ஊராட்சிப் பணியாளர்கள் குறித்து அதேபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தச் சட்டம் திருத்துவது எப்பொழுது ? அதிலே சில்லரைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்கு மாத்திரம் பென்ஷன் கொடுக்கப்படுமா அல்லது எல்லோருக்கும் கொடுக்கப்படுமா ? ஸ்தலஸ்தாபனங்களில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கு எல்லாம் பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே சிப்பந்திகளாக பணியாற்றக்கூடியவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது ஓர வஞ்சனையாகாதா ? ஆகவே, எல்லோருக்கும் இப்பொழுதிருந்தே கொடுக்கக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்காக முன்னாலிருந்த அரசு முயற்சி எடுத்து, பிறகு என்ன காரணத்திற்காகவோ அது நிறுத்தி வைக்கப்பட்டது. இப்பொழுது இந்த அரசாங்கம் அதைப் பார்த்து, பரிசீலித்து வருகிறது. ஓர வஞ்சனை யற்ற வகையில், அனைவருக்கும் நீதி வழங்கத்தக்க வகையில் சட்டம் திருத்தப்படும்.

1968 மார்ச் 2]

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, பென்ஷன் கொடுப்ப தற்காக சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்த ஏற்பாடு செய்யப்பட்டு வரு கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பென்ஷன் கொடுப்பது இருக்கட்டும். முதலில், சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைப்பது போலவே அதே ஸ்கேல் ஆப் பே இந்த லோகல் பாடீஸில் வேலை செய்பவர்களுக்கும், அதாவது அதே சம்பள விகிதம் கிடைக்கும்படி செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: சட்டத்தைத் திருத்துகிறபொழுது, அதனுடைய பரிசீலனையிலே பென்ஷன் கிடைப்பதற்கும் வழி ஏற்படும் என்று சொன்னேனே தவிர, பென்ஷனுக்காகச் சட்டம் திருத்தப்படும் என்று சொல்லவில்லை. கடந்த 20 ஆண்டு காலத்தில் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்ததைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று எடுத்துரைக்க விரும்பு கிறேன். ஆகவே, சட்டத்தைத் திருத்தியபிறகு, அனைத்தையும் பரிசீலித்து தேவையான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எம். எஸ். மணி: திருச்சி நகராட்சி ஓய்வு பெற்ற சிப்பந்தி களின் சங்கத்துக்கு பென்ஷன் கிடையாது என்று உத்தரவு ஏதாவது அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இப்பொழுது வேலையில் இருப்ப வர்களுக்கே பென்ஷன் கொடுக்கக்கூடிய திட்டம் இன்னும் அமல் நடத்தப் படவில்லை. ஆகவே, ஓய்வு பெற்றவர்களுடைய பிரச்னை இப்பொழுது எழவில்லை.

திரு. எம். பூபதி: ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் என்று சொல்லும் பொழுது நகரசுத்தித் தொழிலாளர்களும் அதில் அடங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: சட்டத்தைத் திருத்துகிறபொழுது பரிசீலிக்கவேண்டிய ஒன்றாகும் அது.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: நகர பஞ்சாயத்து சிப்பந்திகளுக்கும் பென்ஷன் கொடுப்பது பற்றி சர்க்கார் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நான் ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன். இதைச் செய்து முடித்தவுடன் ஊராட்சி பணியாளர்கள் குறித்தும் அதே போன்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று என்னுடைய மூலக்கேள்விக்கான பதிலில் கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்துடன் வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. மு.ப. 10-00

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(i) தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை பம்பாய் நகரத்தில் திரையிட சிவசேனையினர் எதிர்ப்பு.

***திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, தமிழக சட்ட மன்றத் தின் 42-வது விதிக்கிணங்க அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க் கண்ட விஷயத்தைப் பேரவைக்குக் கொண்டு வருகிறேன்—

"சென்னையில் தயாரிக்கப்பட்ட 'ஆத்மி' என்ற இந்தி சினிமா படத்தை பம்பாய் நகர் கணேஷ் தியேட்டரில் காண்பிக்கலாகாது என 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி பம்பாய் சிவசேனை இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்து படக்காட்சி ரத்து செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட இந்தி சினிமாவையும்கூட அனுமதிக்கமாட்டோம் என்ற